செ.வெ.எண்: 902/2016 நாள்: 22.12.2016

# பத்திரிக்கைச் செய்தி

கன்னியாகுமரி மாவட்டத்தின் தொழில் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பல்வேறு தொழில் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வரும் மாவட்டத் தொழில் மையம், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் மூலம் (UYEGP) மாவட்டத்திலுள்ள ஏராளமான இளைஞர்களுக்கு வங்கிகள் மூலம் தமிழக அரசால் வழங்கப்படும் 25% மானியத்துடன் கூடிய தொழிற்கடனுக்கு பரிந்துரை செய்து மாவட்டத்தின் தொழில் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றி வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை உற்பத்தி சார்ந்த தொழில்களுக்கு ரூ.5 இலட்சம் வரை திட்டத் தொகை அனுமதிக்கப்பட்டு அரசு மானியம் 25% என்ற வகையில் ரூ.1.25 இலட்சம் வரை மானியத் தொகையும் அனுமதிக்கப்பட்டுள்ளது. தமிழகஅரசின் குறு, சிறு நடுத்தரத் தொழில்கள் துறை அரசு ஆணை எண்.35 நாள்.11.11.2016-ன்படி மேற்கண்ட திட்டத்தொகை, உற்பத்தி சார்ந்த தொழில்களுக்கு ரூ.10,00,000/-வரை அனுமதிக்கப்பட்டுள்ளது. எனினும் மானியத்தொகை தற்போதைய அதிக பட்சத் தொகையான ரூ.1,25,000/- வரை மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது. ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் இவ்வரிய வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விபரங்களுக்கு "பொது மேலாளர்" மாவட்ட தொழில் மையம், தொழிற்பேட்டை, கோணம், நாகர்கோவில் - 629004, என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவிக்கிறார்கள்.

பொது மேலாளர்
மாவட்ட தொழில் மையம்,
நாகர்கோவில்.

மாவட்ட ஆட்சித்தலைவர்
கன்னியாகுமரி மாவட்டம்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.